

நீலகிரி மாவட்டம், உதகை சேரிங்கிராஸ் தோட்டக்கலை வளாகத்தில், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில் நடைபெற்ற தொழில் முனைவோருக்கான கடன் வழிகாட்டுதல் முகாமினை தொடங்கி வைத்து, 47 பயனாளிகளுக்கு ரூ.3.65 கோடி மதிப்பில் பல்வேறு கடனுதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.லட்சுமி பவ்யா தண்ணீரு, பொது மேலாளர்கள் (மாவட்ட முன்னோடி வங்கி) சதானந்த், திருமதி.திலகவதி (மாவட்ட தொழில் மையம்) மற்றும் கழக நிர்வாகிகள் உட்பட பலர் உள்ளனர்.





அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி 234/77 ஆய்வுத் திட்டத்தின் கீழ் சட்டமன்ற உறுப்பினர் பாபுவின் செய்யூர் தொகுதியில் 201 ஆவது ஆய்வை மேற்கொண்டார். செய்யூரில் அமைந்துள்ள கிளை நூலகத்தைப் பார்வையிட்டு நூலகத்தின் அடிப்படை வசதிகள் மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளை எடுப்பதாக உறுதி அளித்தார். தொடர்ந்து நூலகத்தில் வைக்கப்பட்டிருந்த கணினிகளின் இணையதள சேவையின் வேகத்தினை ஆய்வு செய்து, வாசகர்களிடமும் கலந்துரையாடினார்.

### தி.மு.க பவள விழா மாபெரும் பொதுக்கூட்டத்தில்

# திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.வினர் பெருந்திரளாக கலந்து கொள்வீர்!

### மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. அறிக்கை!



திருவள்ளூர், செப்.27- திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. அறிக்கை வருமாறு:-

தி.மு.க பவள விழாவை முன்னிட்டு நாளை (28.09.2024 சனிக்கிழமை) மாலை 5.00 மணியளவில காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரி திடலில் தி.மு.க கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்கும் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்கள் சிறப்புரை ஆற்ற உள்ளார். அது சமயம் இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், வார்டு கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முந்நாள் இந்நாள் ஊராட்சி ஒன்றிய குழுத்தலைவர்கள், நகரமன்ற தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள், மாவட்ட. ஒன்றியகுழு உறுப்பினர்கள் மற்றும் நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், முந்நாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, தகவல் தொழில்நுட்ப அணி, அமைப்புச்சாரா ஓட்டுநர் அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள் வாக்குச் சாவடி நிலை முகவர்கள் (பிஎல்ஏ), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (பிஎல்சி) மற்றும் கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

### திருநின்றவூரில் ஆவடி சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து

# 15 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி கட்டிடம்!

### முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ, திறந்து வைத்தார்!

திருவள்ளூர், செப். 27 திருவள்ளூர் மாவட்டம், ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருநின்றவூர் நகராட்சி அருகில் புதிய அங்கன்வாடி கட்டிடம் வேண்டும் மென்று கோரிக்கை வைத்தனர். இந்த நிலையில் ஆவடி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து 15 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு புதிய அங்கன்வாடி கட்டிடம் பணிகள் தொடங்கப் பட்டன.

இந்நிலையில் முடிக்கப் பட்ட கட்டிடம் திறப்பு விழா நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு புதிய கட்டிடத்தை திறந்து வைத்து அங்கன்வாடி குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கினார்.

இந்நிகழ்ச்சி முன்னதாக பூவிருந்தவல்லி ஒன்றியம் நடுகுத்தகை ஊராட்சி பகுதியில் 25 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் புதிய சுகாதாரம் நிலையம் திறந்து வைத்ததை தொடர்ந்து குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

இதனை தொடர்ந்து ஆவடி அடுத்த அண்ணாநகர் பகுதியில் உள்ள அரசின் மேல்நிலைப் பள்ளியில் 11-ஆம் வகுப்பு படிக்கும் 101 பள்ளி மாணவ -மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ. ரமேஷ், ஆவடி மேயர் ஜி.உதயகுமார், மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் டி.தேசிங்கு, நகரச் செயலாளர் தி.வை. இரவி, பகுதி கழகச் செயலாளர் ஜி.நாராயண பிரசாந்த், மண்டல குழு தலைவர் ஜோதிலட்சுமி, நகர் மன்ற தலைவர் உஷா ராணி ரவி, நகர் மன்ற துணைத் தலைவர் சரளா நாகராஜ், பரமேஸ்வரி கந்தன், ஒன்றிய குழு உறுப்பினர் யமுனா ரமேஷ், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே. சுரேஷ் குமார், ஊராட்சி மன்ற தலைவர் லட்சுமி, நகர் மன்ற உறுப்பினர்கள் வீரபாண்டியன், டாக்டர் ராஜேஷ் குமார், பி.எல். ஆர்.தேவியோகா, சரவணன், தங்கராஜ், ஜெயகுமார், தலைமை ஆசிரியர் சீமா அக்தர், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் எம். மோகன், நகர கழக நிர்வாகிகள் அன்பழகன், சி.கமலக்கண்ணன், பாபு, ரவி, தங்கமணி, ப.கந்தன், எம்.குணசேகரன், ஜி.சுகுமார், வார்டு செயலாளர்கள் வழக்கறிஞர் ரவிக்குமார், சாலிம், வெங்கடேசன், ரவிச்சந்திரன், செந்தில்வேல், அசோக்குமார், பிரசன்னா, மகேஷ்குமார், வார்டு உறுப்பினர்கள் சாந்தகுமாரி, இ.ஏ.சந்திரன், ராதாகிருஷ்ணன், ஹரி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### மதுரவாயல் சட்டமன்றத் தொகுதியில்

# 1480 மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்! காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

மதுரவாயல், செப் 27- மதுரவாயல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அரசு மேல் நிலைப் பள்ளிகளில் பயிலும் 11ஆம் வகுப்பு மாணவ - மாணவிகளுக்கு போரூர் அரசு மகளிர் மேல் நிலைப் பள்ளியில் 1480 விலையில்லா மிதிவண்டி, சென்ற ஆண்டு 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் முதல் மூன்று மதிப்பெண்களை பெற்ற மாணவ மாணவியருக்கு பண முடிப்பு, கேடயம் (ம) பதக்கங்கள் வழங்கிய நிகழ்ச்சி அமைச்சர் மா. சுப்பிரமணியன், காரம்பாக்கம் க.கணபதி, எம்.எல்.ஏ., ஆகியோர் பங்கேற்றார்.

மதுரவாயல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அரசு மேல் நிலைப் பள்ளிகளில் பயிலும் 11ஆம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கு 1480 விலையில்லா மிதிவண்டி, சென்ற ஆண்டு 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் முதல் மூன்று மதிப்பெண்களை பெற்ற மாணவ மாணவியருக்கு பண முடிப்பு, கேடயம் (ம) பதக்கங்கள் வழங்கிய நிகழ்ச்சி அன்று 24.09.2024 செவ்வாய்கிழமை காலை 9 மணியளவில் மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, எம்.எல்.ஏ., தலைமையில் போரூர் அரசு மகளிர் மேல் நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு நிகழ்ச்சியை துவக்கி வைத்து சிறப்புரையாற்றி மாணவச் செல்வங்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் மற்றும் பரிசுகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் 11வது மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், எம்.சி., அயப்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் அயப்பாக்கம் அ.ம.துரை வீரமணி, எஸ்.அருணாசலம், முன்னாள் போரூர் பேரூராட்சித் தலைவர், மாவட்ட அமைப்பாளர்கள்: வி.ராஜேஷ், எஸ்.பி. அருள், செ.ரவி, மா.இ.அ.து. அமைப்பாளர், பகுதி கழக நிர்வாகிகள்: பி.எம்.செல்வராஜ், வே.மதியழகன், இரா.பால்பாண்டியன், எஸ்.பாரதி, எம்.சி., கே.ராஜி, எம்.சி. ஆர்.கர்ணல். ம.உதயகுமார். மாமன்ற உறுப்பினர்கள்: ச.சங்கர் கணேஷ்.எம்.சி. செல்வரமேஷ், எம்.சி., ஹேமலதாகணபதி, எம்.சி., சாந்திஇராமலிங்கம், எம்.சி., ஏ.மாலினி, எம்.சி., எம்.இ. ஸ்டாலின், எம்.சி., ரமணிமாதவன், எம்.சி., வட்ட கழக செயலாளர்கள்: அ.மோசஸ். எஸ். ரமேஷ்ராஜ், த.ரமேஷ், சி.சுந்தர்,J.பாஸ்கர், தி.சார்லஸ், ஆ.செல்வம், மூன் லைட்T.ரவி, (மு.வ.க.செ), எஸ்.ஜி.மாதவன், எம்.கே.பி.அண்ணாதாசன், எம்.எம்.ஜெயரத்தினம், ப.ஆலன், எம்.ரூபன் மற்றும் மாவட்ட பிரதிநிதிகள் வி.விஜயன், ஆர்.சேகர், 151வது வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் செயல் வீரர்கள் செ.ராமையா, ம.சிவா, கே.முரளி, கு. விமலா,வி.பன்னீர்செல்வம், கோ.கண்ணதாசன், ஆர். முரளிகிருஷ்ணன், ப.சரவணன், மோ.சுந்தர், கே. குமார், பூத்தப்பேடு பி. ரகு, இ.பிரசாந்த், எல்.சீனு, மு.ஐயப்பன், என்.துரை, பி.கே.சண்முகம், ஏ.ஆனந்த், வி.பாலு, மு.தங்கராஜ், ஜெ.விஜயன், க.தீபன், மு. தங்கராஜ் மற்றும் மாவட்ட பிரதிநிதி கள்,அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், அணிகளின் பகுதி, வட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் மற்றும் கழகத் தோழர்கள், அரசுத் துறை அதிகாரிகள், தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவச் செல்வங்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

# சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

# அண்ணாநகர், ஆயிரம்விளக்கு, சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் தகவல்தொழில்நுட்ப அணிப் பொறுப்பிற்கு நேர்காணல்!

### மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு அறிவிப்பு!



சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட அண்ணாநகர், ஆயிரம்விளக்கு, சேப்பாக்கம்திருவல்லிக்கேணி ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் தகவல் தொழில்நுட்ப அணிக்கான மாவட்ட துணை அமைப்பாளர்கள் / தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள்/பகுதி ஒருங்கிணைப்பாளர்கள்/வட்ட ஒருங்கிணைப்பாளர்கள்/பாக ஒருங்கிணைப்பாளர்கள் ஆகிய பொறுப்புகளுக்கான நேர்காணல் நடைபெற உள்ளது. இதில் ஆண், பெண் என இருபாலரும் கலந்து கொள்ளலாம். தங்களது சுயவிவரங்களை (RESUME) புகைப்படத்துடன்

chennaiwestdmkitwing@gmail.com (or)

Whatsapp No.: 9884299170

என்ற மின்னஞ்சலுக்கு செப்டம்பர் 30ந் தேதிக்குள் அனுப்ப வேண்டும்.

**நேர்காணல் விவரங்கள்**

நாள் : அக்டோபர் 2, 2024 - புதன் கிழமை

நேரம் : காலை 10.00 மணி

இடம் : சென்னை மேற்கு மாவட்ட அலுவலகம், எண்.20/32, காம்தார் நகர் முதல் தெரு, நுங்கம்பாக்கம், சென்னை-600 034.

குறிப்பு:
1) கல்வித்தகுதி : Degree / Diploma
2) Facebook/Twitter/Whatsapp/Instagram ஆகிய கணக்குகளை பயன்படுத்துபவராக இருக்க வேண்டும்.
3) கல்வித்தகுதிக்கான சான்றிதழ்களை நேர்காணலுக்கு கொண்டு வர வேண்டும்.

**நே.சிற்றரசு**
செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

# பெருமாள்பட்டில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம்!

### ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

திருவள்ளூர், செப். 27- திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருவள்ளூர் ஒன்றியம், பெருமாள்பட்டு ஊராட்சியில் தமிழ்நாடு அரசின் பொது சுகாதாரம் மற்றும் நோய் மருந்து தடுப்பு துறை சார்பில் ரூ.60 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலைய புதிய கட்டிடம் திறப்பு விழா நடைபெற்றது.

விழாவிற்கு மாவட்ட சுகாதார அலுவலர் டாக்டர் பி.பிரியாராஜ் தலைமை தாங்கினார். ஊராட்சி மன்ற தலைவர் பி. சீனிவாசன், வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் எஸ்.எம்.சுபாஷ் சந்திர போஸ், ஊராட்சி துணைத் தலைவர் செல்வி நாகரத்தினம் ஆகியோர் வரவேற்றனர்.

ஒன்றிய குழு தலைவர் ஜெயசீலி ஜெயபாலன், ஒன்றிய தி.மு.க. செயலாளர் ஆர்.ஜெயசீலன், பொதுக்குழு உறுப்பினர் த.எத்திராஜ், மாவட்ட சுகாதார அலுவலரின் நேர்முக உதவியாளர் சி. மோகன், மாவட்ட தாய் சேய் நல அலுவலர் தேவி ஸ்ரீ, மாவட்ட மலேரியா அலுவலர் மதியழகன், மாவட்ட பயிற்சி குழு மருத்துவர் தீபலட்சுமி, உதவி இயக்குனர் லட்சுமணன், மாவட்ட நலக்கல்வியாளர் கணேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந் நிகழ்ச்சியில் பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி புதிய கட்டடத்தை திறந்து வைத்து குத்து விளக்கு ஏற்றி வைத்து விழா பேருரை ஆற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஏழைகளின் மக்களின் நலனுக்காக எண்ணற்ற திட்டங்கள் தீட்டி நிறைவேற்றி வருகிறார். ஏழை மக்களின் உடல் நலன் கருதி நோயின்றி வாழ வேண்டும் என்பதற்காக மருத்துவத் துறையில் மட்டும் வரு முன் காப்போம் திட்டம், மக்களை தேடி மருத்துவம், இல்லம் தேடி மருத்துவம் உள்பட பல்வேறு திட்டங்களை கொண்டு வந்து நிறைவேற்றி வருகிறார்.

இதன் மூலம் தமிழ் நாட்டை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக கொண்டு வந்து சாதனை படைத்துள்ளார். எனவே தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அனைத்து மாநில முதல்வர்களுக்கும் வழிகாட்டும் முதல்வராக திகழ்கிறார் என்றார்.

இந்த நிகழ்ச்சியில் தி.மு.க. நிர்வாகிகள் எஸ். பரமேஸ்வரன், ஜெயா புகழேந்தி, கஜேந்திரன், கௌரி கஜேந்திரன், சௌந்தர்ராஜன், பெருமாள்பட்டு எம்.சக்திவேல், த.சுகுமார், ராஜாராம், ஏழுமலை, பார்த்தசாரதி, ஜெகதீசன், ராமச்சந்திரன், நடராஜன், ரமேஷ், முகுந்தன், ராஜசேகர், துரை லோகநாதன், ஜெகன், அப்புன்ராஜ், சதீஷ், அருண் கீதன், அகஸ்டியன், பத்மநாபன், சுமன், விஜி, விக்னேஸ்வரன், கவிதா உள்பட பலர் கலந்துகொண்டனர்.



எழும்பூர் தொகுதியைச் சேர்ந்த 58ஆவது வட்ட முன்னாள் பகுதி பிரதிநிதி மு.செல்வகுமார் அவர்களது காலஞ்சென்ற இளையமகன் செ.திலிப்குமாரின் முதலாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி, பெரியமேடு, திருவேங்கடம் முதல் தெருவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது. கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் இந்நினைவேந்தல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, அவரது உருவப்படத்தைத் திறந்து வைத்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். இந்நிகழ்வில் முன்னாள் வட்டச் செயலாளர் புருஷோத்தமன், அவைத் தலைவர் வெ.மருதன், மாவட்டப் பிரதிநிதி காந்தி, வழக்கறிஞர் விஜயபோஸ், உதயநிதி ஸ்டாலின் ரசிகர் மன்றத்தின் மாவட்டப் பொருளாளர் துறைமுகம் எஸ். ஜெகன், எழும்பூர் பகுதிச் செயலாளர் எஸ்.தினகரன், 58வது வட்டத் தலைவர் ஆர்.கே.தமிழரசன், 58 ‘அ’ வட்டச் செயலாளர் து.சரண்ராஜ், மன்றக் காப்பாளர் விமல், மன்ற உறுப்பினர்கள் கலைச்செல்வன், எஸ்.ஸ்டீபன்ராஜ், ரூபன்ராஜ் மற்றும் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் எழும்பூர் தொகுதி பகுதிச் செயலர் ரஞ்சித், காங்கிரசு கட்சியின் 58வது வட்டத் தலைவர் மன்மதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



மாதவரம் வடக்கு பகுதி 23 அ வட்ட இளைஞரணி செயல்வீரர் யாபேஸ் என்கின்ற ராஜேஷ் தாயார் நினைவில் வாழும் பரிமளா அவர்களின் திருவுருவ படத்தை வட்டச் செயலாளர் வி.ஆர். குப்பன் தலைமையில் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் திறந்து வைத்து மலர் அஞ்சலி செலுத்தினார். சொக்கலிங்கம் வி.ஆர்.கே. ஜவகர், சிட்டி சேகர், அறிவழகன் மற்றும் நிர்வாகிகள் உடன் உள்ளனர்.